896

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

# "வக்கீல்"

★

இந்த இதழில்


வருமான வரித் திருத்தச் சட்டம்

ஜீவபலித் தடைச் சட்டம்

தந்திக் கம்பிகளை வைத்திருப்பது குற்றம்

பீடி—புகையிலை தொழிலாளர்கள் சம்பள நிர்ணயம்

வழக்கும்—தீர்ப்பும்

கேள்வி—பதில்

நியூஸ்பிரிண்ட் கண்ட்ரோல்

எலெக்ட்ரிக் பல்பு

சிசு ஆகாரங்கள் விலை நிர்ணயம்

வனஸ்பதி வியாபாரத்தில் நிபந்தனை


★

896
1-51.

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

## தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAR 1951
MADRAS

THE "VAKIL" — பிப்ரவரி-1951 — 4 அணா

ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை.

ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—

தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

## மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ

தெப்பக்குளம் P. O., திருச்சி.

---

## "எலிக்ஸிர் அஸ்வகந்தா"

மகரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதகு, இடுப்பு வலிகள் ஒழித்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது "எலிக்ஸிர் அஸ்வகந்தா"வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10
தபால் செலவு பிரத்யேகம்
ஆயுர்வேத வைத்தியர்

**T. V. ஜெயராம சாஸ்திரிகள்,**
வீரராகவ வைத்திய சாலா,
ஸ்ரீரங்கம் P. O., S. I.

---

ஸ்தாபிதம் 1942 — தந்தி "லலிதாலய"

உயர்தர ஆயுர்வேத சிகித்ஸைக்கும் மருந்துக்கும்

## லலிதா பார்மஸி

## ஆயுர்வேத வைத்தியசாலை

கும்பகோணம்.

ஹெட்-ஆபீஸ்
49, மூர்த்தி செட்டித் தெரு.

பிராஞ்சு
73, பக்தபுரி அக்ரஹாரம்.

விசேஷ தயாரிப்பு
நரம்பு தளர்ச்சிக்கு "யௌவநீ"

---

எங்கும் புகழ்பெற்ற அற்புத சஞ்சீவி

## "ஜெயராம்" காயசுத்திலேகியம் (Regd.)

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்
ஆயிரக்கணக்கான மக்களால் தினம்
உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரி வலி, முதுகு வலி, புளித் தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயிற்றுப்பிசம், வயிற்று வலி, இடுப்பு வலி, கை கால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிகட்டி சுரம், மூல நோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

1 சேர் ரூ. 4—8—0 ½ சேர் ரூ. 2—4—0

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும். வி. பி. பி செலவு தனி.
உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்.

# "வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத
சட்ட வெளியீடு



ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர் B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L., (ஆசிரியர்)



"வக்கீல்" சந்தா விபரம்

வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு } ரூ. 3—0—0
விசேஷ வருட சந்தா ரூ. 5—0—0
(12 இதழ்களுக்கும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்களுக்குமாக)
ஷை வெளிநாடு ... ... ரூ. 10—0—0

### சந்தாதாரர்கள் கவனிக்கவும்

(1) வருட சந்தாதாரர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ்களும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சாதாரணமாய் வி. பி. பி. கிடையாது.

(2) சந்தாத்தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப :—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 : கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

(3) மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

(4) சிலேரன் சேயர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பும்படி எழுதி ரூ. 5—7—0 செலுத்தி விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

(5) வெளிநாட்டிலிருந்து சந்தா தொகையை பிரிட்டிஷ்போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம்.



"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 பிப்ரவரி 1951 இதழ் 2


## பொருள் அடக்கம்


| | பக்கம் |
|---|---|
| குறிப்புகள் | 2 |
| **புதிய சட்டங்கள்** | |
| சுருக்கியும்—வரிசையாகவும் | 4 |
| **புதிய சட்டங்கள்** | |
| பொருக்கியும்—விவரமாயும் | |
| *ஜீவ பலித் தடைச் சட்டம் | 6 |
| *சட்ட விரோதமாய் வைத்திருக்கும் தந்திக்கம்பிகளைப் பற்றிய சட்டம் | 7 |
| **தொழிலாளர் பகுதி** | |
| *பீடி—புகையிலை தொழிலாளர்—சம்பள நிர்ணயம் | 8 |
| **வரிகள்** | |
| *வருமான வரி திருத்தச் சட்டம் | 9 |
| வழக்கும்-தீர்ப்பும் | 11 |
| கேள்வி-பதில் | 14 |
| **கண்ட்ரோல் - லைசென்ஸ் - ரேஷன்** | |
| விலை நிர்ணயம் — இதர சர்க்கார் அறிக்கைகள். | 17 |

187704
சென்னை-600 008

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 3 பிப்ரவரி 1951 இதழ் 2

## குறிப்புகள்.

**காகிதம்:**—'நியூஸ் பிரிண்ட்' என்ற பத்திரிகை அச்சடிக்கும் காகிதம் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படவில்லை. அன்னிய நாடுகளிலிருந்துதான் வரவேண்டும். தாராளமாகக் கிடைத்து வந்த இந்தக் காகிதத்தில் எக்காரணத்தாலோ திடீரென்று ஒரு நெருக்கடி ஏற்பட்டு விட்டது. இதில் பல பத்திரிகைகள் மாட்டிக் கொண்டு விட்டன.

நேரடியாகச் சீமைகளிலிருந்து மிகக் குறைந்த விலைகளில் இக்காகிதத்தைத் தருவிக்கும் பத்திரிகைகளும், விளம்பரங்களுக்கு அதிக இடமளிக்கும் பத்திரிகைகளுமே, அரை மடங்கு பத்திரிகை விலையை உயர்த்த நேர்ந்திருக்கிறதென்றால், அவ்வசதிகள் இல்லாத மற்றப் பத்திரிகைகள் அதைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்றே சொல்ல வேண்டும்.

**கண்ட்ரோல்:**—'நியூஸ் பிரிண்ட்' காகிதக் கட்டுப்பாடு உத்தரவு ஒன்று மத்திய சர்க்காரால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 'விலை' கண்ட்ரோல் இல்லை. மேலும் யார் யாருக்குத்தான், வியாபாரிகள் அல்லது இக்காகிதத்தைத் தேக்கி வைத்திருப்பவர்கள், அதை விற்கலாம் என்பதைப் பற்றியும் இன்னும் விதிகள் வரவில்லை. ஆனால் கூடிய சீக்கிரமாக இவ்விதிகளும் ஏற்படுமென்று எதிர்பார்க்கலாம்.

**தற்காப்பு:**—நாம் இவ்விஷயத்தைப் பற்றி இவ்வளவு விவரமாக எழுதியது தற்காப்புக்காகவே. ஏதாவது ஒரு வழியில் காகித நெருக்கடி தீராமல் போனால், வரும் மார்ச்சு அல்லது ஏப்ரல் மாதத்திலிருந்து "வக்கீல்" தன் விலையையும், வருட சந்தா, விசேஷ வருட சந்தாத் தொகைகளையும் சற்று உயர்த்த நேரலாம். நேயர்கள் அதைப் பொருட்படுத்தாது தங்கள் அபிமானத்தை அளித்து வருமாறு வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறோம். விலை கொஞ்சம் உயர்ந்தாலும் "வக்கீலி"ன் தொண்டு பன்மடங்கு அதிகரிக்குமென்று மட்டில் உறுதி கூறுவோம்.

**மடங்கள்:**—ஹிந்து தேவாலயங்களைப் பற்றியும் மடாலயங்களைப் பற்றியும் சமீபத்தில்தான் சென்னை சட்ட சபைகள் ஒரு சட்டம் ஏற்படுத்தி இருக்கின்றனர். இச்சட்டம் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று கெஜட்டில் பிரசுரமானவுடன் அமுலுக்கு வரும். அதற்குள் இந்திய யூனியன் பார்லிமெண்டில் மடங்களைப் பற்றியவரை ஒரு புதிய சட்டம் இயற்ற, இரண்டு மசோதாக்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஒன்று திரு. அனந்தசயனம் அய்யங்கார் M. P. அவர்களாலும் மற்றொன்று திரு. பார்கவா M. P. அவர்களாலும் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தேவாலயங்களைப் பற்றியும் மடாலயங்களைப் பற்றியும் சட்டங்கள் இயற்ற இந்திய யூனியன் பார்லிமெண்டுக்கும் அதிகாரம் உண்டு; அந்தந்த ராஜ்ய சட்ட சபைகளுக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் ராஜ்ய சட்டசபைகளால் இவ்வித விஷயங்களில் இயற்றப்பட்ட சட்டத்தை ரத்து செய்ய பார்லிமெண்டுக்கு அதிகாரம் இருக்கிறது. இப்பொழுது பார்லி

மெண்டில் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாக்களில் சென்னைச் சட்டத்தை ரத்து செய்யும் ஷரத்துக்களும் இருக்கின்றன.

## முஸ்லீம்களுக்கும் பல தாரத் தடை மசோதா.

இப்பொழுது சென்னை சம்பந்தப்பட்ட வரையில், ஹிந்துக்களுக்கு மட்டில், ஒரு பலதாரத் தடைச் சட்டம் இருக்கிறது. அதாவது ஒரு சென்னை ஹிந்துவுக்கு ஒரு மனைவி உயிருடன் இருக்கும்போது, அவருடன் ஏற்பட்ட விவாகத்தை ரத்து செய்து கொள்ளாமல், அவர் வேறு மணம் செய்து கொள்ளக் கூடாது. இப்பொழுது அகில இந்தியாவிலும், முஸ்லீம்கள் உட்பட எல்லா இந்தியப் பிரஜைகளையும் கட்டுப்படுத்தும்படி, ஒரு பலதாரத் தடைச் சட்டம் இயற்ற, பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. தாகூர்தாஸ் பார்கவா அவர்களால் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

## தொழிலாளர்கள் சம்பந்தமான மசோதாக்கள்

சட்டங்களாகச் செய்வதற்காக இந்திய யூனியன் பார்லிமெண்டில் மத்திய சர்க்காரால் இரண்டு மிக முக்கிய மசோதாக்கள் கொண்டு வரப் பட்டிருக்கின்றன. அவையாவன:—

(1) தொழிலாளர் உறவு மசோதா (Labour Relations Bill) (2) தொழிற் சங்க மசோதா (Trade Unions Bill). இந்த இரண்டு மசோதாக்களும் பொறுக்கு கமிட்டிகளால் பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களால் ஏற்படுத்திய பல மாறுதல்களுடன் மறுபடியும் இந்தியா கெஜட்டில் பிரசுரம் செய்யப் பட்டிருக்கின்றன. இம் மசோதாக்களின் முக்கிய அம்சங்களையும் தொழிற்சட்டங்களில் ஏற்படக் கூடிய மாறுதல்களையும் நேயர்கள் அடுத்து வரும் "வக்கீல்" இதழ்களில் படிக்கலாம்.

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். ஷை தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பிவைக்கவும்.

*N.B.* (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும், (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்பு தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும் (3) *V. P.* கிடையாது (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

கோட்டமருதூர்.
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,
அரகண்டநல்லூர் *P. O.* (*S. A. Dt.*)

ஹார்மோனியம், பிடில், வீணை, தம்பூர், சுருதிப்பெட்டி இவைகள் சுத்தமாக ரிப்பேர் செய்து கொடுக்குமிடம்:—

S. கெங்காதரன்,
ஹார்மோனிய வியாபாரம்,
கும்பகோணம்.

பற்களில் ஏற்படும் சகல வியாதிகளையும் போக்குவதற்கென்றே உயர்ந்த மருந்து மூலிகைகளைக் கொண்டு தயார்செய்யப்பட்ட ஹானிமன் பற்பொடியை உபயோகித்து உண்மை காணுங்கள்.

தயாரிப்பவர்:—

(Homeo) Dr. S. V. வீரராகவன்,
ஹானிமன் ஹோமியோபதி டிஸ்பென்ஸரி,
பெரியதெரு, :: கும்பகோணம்,

# புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

## 1950 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன]

**64 ஆவது (மத்திய) சட்டம்** (4-12-1950) The Road Transport Corporations Act, 1950—ரஸ்தா போக்கு வரத்து ஸ்தாபனச் சட்டம். இது சம்பந்தமாய் 1948ல் இயற்றப்பட்ட ஒரு சிறிய சட்டத்தை ரத்து செய்து ரஸ்தா போக்கு வரத்து சம்பந்தமாய் பல முக்கிய ஷரத்துக்கள் அடங்கிய இச்சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இச்சட்டப்படி ஒவ்வொரு ராஜ்ய சர்க்காரும் ஒரு ரஸ்தா போக்கு வரத்து ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். பொது மக்களின் சௌகரியத்திற்காகவும் கைத்தொழில், வியாபாரம் இவைகளை அபி விருத்தி செய்யவும், இந்த ஸ்தாபனத்திற்கு ஏராளமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனம், தானே மோட்டார் போக்கு வரத்து போன்ற வசதிகளை நேரில் நடத்தவும் ஒழுங்குபடுத்தவும், ரஸ்தா மூலம் பிரயாணம் செய்பவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அதிகாரமுண்டு. இந்த ஸ்தாபனத்திற்கு வேண்டிய மூல தனத்தை மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்காருபாகக் கொடுப்பார்கள். பொது மக்களிடமும் பங்குகள் சேகரிக்கலாம். இப்பொழுது ரயில்வேக்கள் இருப்பதுபோலவே, ரஸ்தா மூலம் ஏற்படும் போக்கு வரத்தை, இந்த ஸ்தாபனம் விருத்தி செய்து, ஒழுங்குபடுத்த சக்தி வாய்ந்தது.

**65 ஆவது (மத்திய) சட்டம்** (6-12-1950) The Ajmer Rural Boards and Municipalities, Amendment Act, 1950—அஜ்மீர் ஸ்தல ஸ்தாபனச் சட்டத் திருத்தம்.

**66 ஆவது (மத்திய) சட்டம்** (7-12-1950) The Administration of Evacuee Property Amendment Act, 1950 —அகதிகளின் சொத்துக்களைக் குறித்தச் சட்டத் திருத்தம்.

**67 ஆவது (மத்திய) சட்டம்** (7-12-1950) The Cooch-Behar Assimilation of laws Act, 1950—மேற்கு வங்காளத்தில் அமுலில் இருக்கும் எல்லா சட்டங்களையும் கூச்பிகார் என்ற ராஜ்யத்திலும் அமுலுக்குக் கொண்டு வரும் சட்டம்.

**68 ஆவது (மத்திய) சட்டம்** (8-12-1950) Displaced persons institution of suits and legal proceedings Amendment Act, 1950—பாகிஸ்தான் பிரிவினையால் குடி பெயர்ந்தோர் போடும் தாவாக்களைக் குறித்துக் காலாவதி நிர்ணயம் செய்யும் சட்டத் திருத்தம்.

**69 ஆவது (மத்திய) சட்டம்** (20-12-1950) இந்திய தீர்வைச் சட்டத் திருத்தம். (Indian Tariff, Fourth Amendment Act, 1950.)

**70 ஆவது (மத்திய) சட்டம்** (23-12-1950) சரக்கு சப்ளை-விலைச் சட்டம் (1950)—(The Supply and Prices of Goods Act, 1950.) ஏற்கனவே பார்லிமெண்ட் கூடாமலிருந்தபோது ஜனாதிபதி அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டிருந்த அவசரச் சட்டம் (Central Ordinance 26 of 1950) ரத்து செய்யப்பட்டு, அதே விஷயங்களைச் சில மாறுதல்களுடன் இந்திய பார்லிமெண்டின் சட்டமாக இயற்றப்பட்டிருக்கிறது. சரக்கு சப்ளை-விலை அவசரச் சட்டம் 1950 அக்டோபர் "வக்கீல்" இதழில் விவரமாக விளக்கப்பட்டது.

**71 ஆவது (மத்திய) சட்டம்** (23-12-1950) இந்திய வருமான வரித் திருத்தச் சட்டம். (The Indian Income-Tax Amendment Act, 1950.) வருமான வரிச் சட்டத்திற்காக வருமானத்தைக் கணக்கு

செய்யும்போது முனிசிபாலிடி முதலிய ஸ்தாபனங்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டட வரியைக் குறைத்துக் கொள்ளக் கூடாதென்று 7-10-1950ல் ஜனதிபதி அவர்களால் ஒரு அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. ("வக்கீல்" 1950 நவம்பர் இதழ் பக்கம் 6-பார்க்கவும்.) இப்பொழுது இந்திய பார்லிமெண்டால் அந்த அவசரச் சட்டம் ரத்து செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இத்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இச்சட்டம் விவரமாய் "வரிகள்" என்ற பகுதியில் விளக்கப் பட்டிருக்கிறது.

### 72 ஆவது (மத்திய) சட்டம்

(23-12-1950) அத்தியாவசியப் பண்டங்கள் தாற்காலிக அதிகாரச் சட்டத் திருத்தம். Essential Supplies—Temporary Powers Amendment Act, 1950) கண்ட்ரோல் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 1950 ஆம் வருட 31 ஆவது மத்திய அவசரச் சட்டம் ரத்து செய்யப்பட்டு அதே விஷயத்தைப் பற்றி பார்லிமெண்டால் இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. (1951 ஜனவரி "வக்கீல்", பக்கம் 4 பார்க்கவும்)

### 73 ஆவது (மத்திய) சட்டம்

(23-12-1950) ஜனப் பிரதிநிதிச் சட்டத் திருத்தம் (Representation of the People-Amendment Act, 1950)

### 74 ஆவது (மத்திய) சட்டம்

(28-12-1950) Telegraph Wires-unlawful Possession Act, 1950—சர்க்காருக்குச் சொந்தமான தந்திக் கம்பிகளைப் பொதுமக்கள், சட்ட விரோதமாக, வைத்திருப்பது குற்றமாக்கப்பட்டிருக்கிறது. இச்சட்டம் விவரமாய் வேறு பகுதியில் விளக்கப்பட்டிருக்கிறது.

### 75 ஆவது (மத்திய) சட்டம்

(28-12-1950) இந்திய நர்ஸ் சங்கச் சட்டத் திருத்தம். Indian Nursing Council-Amendment Act, 1950.

### 76 ஆவது (மத்திய) சட்டம்

(28-12-1950) State Railway Provident Fund, Temporary Provisions Act, 1950. பாகிஸ்தான் பிரிவினையால், அக்கப்பக்கங்களில் ரயிலில் வேலை பார்த்து வந்து இறந்தவர்களுடைய பிராவிடெண்ட் பண்ட் தொகையை அவருடைய நெருங்கிய உறவினர்களுக்குக் கொடுப்பது பற்றிய சட்டம்.

### 77 ஆவது (மத்திய) சட்டம்

(28-12-1950) Appropriation-Railways-No. 2 Act, 1950. பொது நிதியிலிருந்து ரயில்வேக்காக இன்னும் ரூ. 21,95,91,000 செலவு செய்ய அனுமதிக்கும் சட்டம்.

### 78 ஆவது (மத்திய) சட்டம்

(28-12-1950) The Khaddar-Protection of Name-Act, 1950. "கதர்" "காதி" என்ற பெயர்களைப் பாதுகாப்பதற்கான சட்டம். "கதர்" அல்லது 'காதி' என்று எந்த பாஷையில் உபயோகித்தாலும், இந்தியாவில், பருத்தி, பட்டு, அல்லது கம்பளி நூல்களைக் கையினல் நூற்று, கைத்தறியில் நெசவு செய்த ஆடைகளைத் தான் குறிக்கும். 1889 ஆம் வருடத்திய இந்திய வியாபாரப் பண்டங்களின் குறிகளைக் குறித்த சட்டப்படி (Indian Merchandise Marks Act, 1889) இச் சொற்கள் ஒரு "வியாபார வர்ணனை" (Trade Description) என்று கருதப்படும். அதாவது வேறு வகை ஆடைகளுக்கு இப்பெயர்களை உபயோகிப்பது குற்றமாகும்.

### 79 ஆவது (மத்திய) சட்டம்

(31-12-1950) The Appropriation No. 4 Act, 1950. இந்தியப் பொது நிதியிலிருந்து இன்னும் ரூ. 63,99,56,000 செலவு செய்ய மத்திய சர்க்காரை அனுமதிக்கும் சட்டம்.

### 80 ஆவது (மத்திய) சட்டம்

(31-12-1950) Coal Mines Provident Fund and Bonus Schemes Amendment Act. 1950. நிலக்கரிச் சுரங்க பிராவிடெண்ட் பண்ட் சட்டத் திருத்தம்.

# ஜீவ பலித்தடைச் சட்டம்.

[Madras Animals and Birds Sacrifices Prohibition Act, 1950 — சென்னைச் சட்ட மன்றத்தால் இயற்றப்பட்டது. 1950 - ஆம் வருடத்திய 32-ஆவது சட்டம். 12-12-1950ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 19-12-1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. சென்னைச் சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதி முதல் இச்சட்டம் அமுலுக்கு வரும்.]

இந்து கோயில்களுக்குள்ளும் அவைகளின் அருகிலும் மிருகங்களையோ பட்சிகளையோ பலியிடுவதை இச்சட்டம் தடை செய்கின்றது. (இந்து அல்லாத வேறு மதத்தினரின் கோயில்களுக்கு இச்சட்டம் கிடையாது. மேலும் இந்துக் கோயில்களில் பலியிடுவதற்காக ஆடு, மாடு, கோழி முதலியவைகளைக் கொல்லக் கூடாதென்றுதான் இச்சட்டம் தடை செய்கின்றது. வேறு இடங்களில், வேறு உபயோகத்திற்காக இவைகள் கொல்லப்படுவதை இச்சட்டம் தடுக்கவில்லை.)

ஒரு கோயிலிலோ, அதன் அருகிலோ, எந்த மிருகத்தையும் பட்சியையும் பலியிடுவது இச்சட்டப்படி ஒரு குற்றம். 'கோயிலின் அருகு' என்றால் கோயிலுக்குச் சமீபத்திலுள்ள எல்லா நிலங்களும் கட்டடங்களும் சேர்ந்ததே. இது கோயிலுக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்த இடங்களில் பலி இடுவது குற்றமாகும். ஆனால் இந்த இடங்கள் சாதாரணமாய், சுவாமி தரிசனத்திற்கோ பூஜைக்கோ உபயோகிக்கப்படும் இடங்களாக இருக்கவேண்டும். அப்படி இருக்கும் இடங்களில்தான் பலி இடுவது குற்றம். கோயில் மண்டபங்கள், பிராகாரங்கள் கோயிலின் முன்பக்கம், பின்பக்கம், கோயிலின் தேர் நிற்குமிடம் ஆகிய இடங்களிலும் பலி இடுவது தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடங்கள் எல்லாம் "கோயிலின் அருகு" (Precincts) என்று சட்டத்தில் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. 'கோயில்' என்பதற்குச் சென்னை இந்துமத ஸ்தாபன பரிபாலனச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தம் தான். மேலும் 'பலி' இடுவது என்றால் சுவாமியின் திருப்திக்காக மிருகங்களை அல்லது பட்சிகளைக் கொலை செய்வதும் ஊனப்படுத்துவதும் சேர்ந்ததே. மேலும், பலி இடுவதில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் குற்றம் செய்பவர்களாவார்கள். பலி இட ஏற்பாடு செய்வதும், பலி இடுவதும், அதற்கு உதவி செய்ய முன் வருவதும், பூசாரியாக இருப்பதும், வேறு வகையில் அதற்கு உதவி செய்வதும், உதவி செய்வதாக முன் வருவதும் குற்றங்கள் தான். மேலும் கோயிலுக்கு அருகில் உள்ள இடங்கள் வேறு ஒருவருடைய சுவாதீனத்திலிருந்தால் அதில் பலி இடுவதற்காக ஜீவ வதை செய்வதை அவர் தெரிந்து அனுமதித்தால் அவரும் குற்றம் செய்பவராவார்.

**தண்டனை:**—இச்சட்டத்தின் ஷரத்துக்களுக்கு மாறாக ஒருவர் பலி இடுவதற்காக ஜீவ வதை அல்லது ஊனம் செய்தால், அவருக்கு ரூ. 300 வரை அபராதம் விதிக்கப்படலாம். இச்சட்டப்படி குற்றம் செய்பவர், அக்கோயில் அதிகாரியாகவோ, ஊழியராகவோ, டிரஸ்டியாகவோ, பூசாரியாகவோ, அல்லது கோயிலிலிருந்து எவ்வித வரும்படி அல்லது மானியத்தை அடைந்து வருபவராகவோ இருந்தாலும், அவருக்கு மூன்று மாதம் வரை வெறுங்காவல் சிறைத்தண்டனை அல்லது ரூ. 300 வரை அபராதம், அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். தம் வசமுள்ள இடத்தைப் பலி இடுவதற்காகத் தெரிந்து அனுமதிப்பவருக்கும் மேற்கண்ட அதிகத் தண்டனைதான்.

ஆனால் இச்சட்டப்படி ஏற்படும் குற்றங்களை விசாரணை செய்ய பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டுக்கும், முதல் அல்லது இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கும் தான் அதிகாரம்.

## சட்ட விரோதமாய் வைத்திருக்கும் தந்திக் கம்பிகளைப்பற்றிய சட்டம்

[1950-ஆம் வருடத்திய 74-ஆவது மத்திய சட்டம். Telegraph Wires — unlawful Possession - Act 1950. ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் 28-12-1950. இந்தியா கெஜட் 30-12-1950-விசேஷ வெளியீடு-பாகம் II-செக்ஷன் 1-ல் பிரசுரம்.]

இது இந்திய யூனியன் பார்லிமெண்டால் இயற்றப்பட்ட சட்டம். அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும். ஒவ்வொரு ராஜ்யத்திலும் மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதியில் அமுலுக்கு வரும். சர்க்காருக்குச் சொந்தமான தந்திக் கம்பிகளை சட்ட விரோதமாய்ப் பொதுமக்கள் அடைந்து வைத்திருப்பது இச்சட்டத்தால் ஒரு பெரிய குற்றமாக்கப் பட்டிருக்கிறது. "தந்திக் கம்பி" என்றால் சர்க்காரால் சாதாரணமாய்த் தந்தி லயன்களில் (Telegraph lines) உபயோகிக்கப்படும் செப்பு (தாமிர)க் கம்பிகளைக் குறிக்கும். அதாவது ஒரு மைலுக்கு 150 பவுண்ட், 200 பவுண்ட், 300 பவுண்ட் நிறையுள்ள கம்பிகளைக் குறிக்கும்.

இத் தந்திக் கம்பிகள், யாரிடமிருந்தாலும் அவ்விஷயத்தை, இச்சட்டம் அமுலுக்கு வந்த ஆறு மாதங்களுக்குள் சர்க்காருக்கு உறுதிமொழியுடன் தெரிவிக்கவேண்டும். எந்த அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும், எந்த நமூனாப்படி தெரிவிக்க வேண்டுமென்றும் மத்திய சர்க்காரால் விதிகள் செய்யப்படும்.

மேலும், இவ்வித தந்திக் கம்பிகள் 10 பவுண்டு எடைக்கு மேல் யாரிடமிருந்தாலும், அவர்கள் இச்சட்டம் அமுலுக்கு வந்த ஒரு வருடத்திற்குள், 10 பவுண்டுக்கு மேல் இருப்பதை உருக்கியோ வேறு வகையிலோ கட்டியாக (ingots)ச் செய்துவிட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், அதைச் சர்க்காருக்கே விற்றும் விடலாம். எந்த அதிகாரியிடம் எந்த விலைக்கு விற்கவேண்டுமென்பதைப் பற்றியும் மத்திய சர்க்காரால் விதிகள் செய்யப்படும்.

மேற்கண்டபடி தம் கைவசம் இருக்கும் கம்பிகளின் விவரத்தை ஆறு மாதத்திற்குள் தெரிவிக்காமலிருப்பதும், ஒரு வருடத்திற்குள் 10 பவுண்டுக்குமேல் கைவசமிருக்கும் கம்பியைக் கட்டியாகச் செய்யாமல், அல்லது சர்க்காருக்கே விற்று விடாமல் இருப்பதும் குற்றங்கள். இக்குற்றங்களுக்கு ஆறு மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

சட்ட விரோதமாக, மத்திய சர்க்காரின் தந்தி இலாகாவைச் சேர்ந்த, மேலே விவரிக்கப்பட்ட, தந்திக் கம்பிகளை ஒருவர் வைத்திருப்பதே ஒரு பெரிய குற்றமாக்கப்பட்டிருக்கிறது. இக்குற்றத்திற்கு 5 வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

ஆனால் யார் மீது இக்குற்றத்திற்காக கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறதோ, அவர் எற்கனவேயே தம்மிடம் இவ்வித தந்திக் கம்பிகள் இருக்கும் விஷயத்தை இச்சட்டப்படி உறுதிமொழியின்மீது சர்க்காருக்குத் தெரிவித்திருந்தால்—அவர் குற்றவாளி என்று சர்க்கார் தான் ருசுவிட வேண்டும். அதாவது அவர் சட்ட விரோதமாக அக் கம்பிகளை அடைந்து வைத்துக் கொண்டிருக்கிறார் என்று சர்க்காரே ருசுப்பிக்க வேண்டும். உறுதிமொழி அனுப்பாதவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டால், அவர் சட்ட விரோதமாகவே அக்கம்பிகளை அடைந்து வைத்துக் கொண்டிருக்கிறார் என்று நீதிபதி முதலெடுப்பில் ஊகித்துக் கொள்ள இச்சட்டம் இடம் கொடுக்கின்றது. இருந்தாலும், தாம் சட்டபூர்வமாகவே, சரியான முறையில், அக்கம்பிகளை அடைந்து, வைத்துக் கொண்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டவர் ருசுவிட்டும் தப்பிக்கொள்ளலாம்.

மத்திய சர்க்காரோ அல்லது மத்திய சர்க்காரால் இதற்காகக் குறிப்பிடப்படும் அதிகாரியோ தான் இச்சட்டப்படிக்கான குற்றங்களுக்குக் கிரிமினல் வழக்குத் தொடரலாம். பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அந்தஸ்துக்குக் குறைந்த கோர்ட்டுகள் இச்சட்டப்படிக்கான குற்றங்களை விசாரிக்க முடியாது.

# தொழிலாளர் பகுதி

## குறைந்தபட்சச் சம்பளச் சட்டம் (1948)

### பீடி - புகையிலை தொழிலாளர்களுக்குச் சம்பள நிர்ணயம் 1-3-1951 முதல் அமுல்

1948 - ஆம் வருடத்திய குறைந்தபட்சச் சம்பளச்சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து, சென்னைச் சர்க்காரால் கீழ்க்கண்ட தொழில்களில் வேலையில் அமர்ந்திருப்பவர்களுக்கு குறைந்தபட்சமாக எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. (G. O. 5257—27-12-1950)

### (பீடி செய்வது உட்பட) புகையிலை வஸ்துக்களை உற்பத்தி செய்கிற தொழிற்சாலையில் வேலையில் அமர்ந்திருப்பவர்களுக்கு

| (1) வேலையின் வகை. | (2) குறைந்தபட்சக் கூலி வீதங்கள். ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| (1) 1000 பீடிகளைச் சுருட்டுவதற்காக .. | 1 | 2 | 0 |
| (2) 1000 சுருட்டுகளைச் சுருட்டுவதற்காக .. | 2 | 0 | 0 |
| (3) (a) ஒரு வீசை புகையிலையைப் பொடியாகச் செய்வதற்காக .. | 0 | 10 | 0 |
| (b) ஒரு வீசை புகையிலையைத் துண்டுகளாகச் செய்வதற்காக .. | 0 | 0 | 6 |
| (c) ஒரு வீசை புகையிலையை உறித்தெடுப்பதற்காக .. | 0 | 1 | 6 |
| (d) ஒரு வீசை புகையிலையை வறுப்பதற்காக .. | 0 | 3 | 0 |
| (e) ஒரு வீசை புகையிலையை அறைத்துக் கலக்க .. | 0 | 5 | 0 |
| (4) புகையிலை பாடம் செய்யும் கைத்தொழிலிலே— வேலை செய்த காலத்தை ஆதாரமாகக் கொண்ட குறைந்தபட்சக் கூலி வீதம் நாளொன்றுக்கு .. | 1 | 4 | 0 |

### மேற்கண்ட 1 முதல் 4 ஐடங்களுக்கும் பஞ்சப்படி அடியிற்கண்ட வீதங்களின் பிரகாரம் கொடுக்க வேண்டும்.

சம்பாத்தியத்தின் ஒவ்வொரு ரூபாய்க்கும் உரியபடி.

குறியீட்டு இலக்கம் 300 வரையில் படி ஒன்றுமில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 301 | முதல் | 325 | வரை | (ரூ. 1க்கு) | 0—1—0 |
| 326 | ,, | 350 | ,, | ,, | 0—2—0 |
| 351 | ,, | 375 | ,, | ,, | 0—3—0 |
| 376 | ,, | 400 | ,, | ,, | 0—4—0 |

(5) புகையிலை பாடம் செய்யவும் பாக்கிங் செய்யவும் (Processing and Packing) தொழிற்சாலை வேலைக்கு (Factory Labour):-

(a) வேலை செய்த காலத்தை ஆதாரமாகக் கொண்ட குறைந்தபட்ச கூலி வீதம் நாளொன்றுக்கு ரூ. 0-12-0-ம் அத்துடன் பஞ்சப்படி குறைந்தபட்சம் நாள் ஒன்றுக்கு ரூ. 0-12-0-ம்.

(b) வேலை செய்த அளவை ஆதாரமாகக் கொண்ட குறைந்தபட்சக் கூலி வீதம்—உறித்தெடுக்கப்பட்ட புகையிலை நரம்புகளின் எடையில் பவுண்டு 1-க்கு ரூ. 0-0-8 (எட்டு தம்படி) வீதமும் அத்துடன் பஞ்சப்படி குறைந்தபட்சம் நாள் ஒன்றுக்கு ரூ. 0-12-0-ம். தினம் எட்டு மணி நேர வேலைக்கு குறைந்தது ரூ. 0-12-0 குறைந்தபட்ச கூலி (பஞ்சப்படி தவிர) கொடுக்கவேண்டும்.

குறிப்பு: —1948-ஆம் வருடத்திய குறைந்தபட்சச் சம்பளச் சட்டத்தின் (The Minimum Wages Act - 1948) ஷரத்துக்கள் "வக்கீல்" 1950 ஜனவரி இதழில் விவரமாய் விளக்கப்பட்டிருக்கின்றன. கவனிக்க வேண்டியவை, சுருக்கமாக, பின் வருமாறு:—

இச்சட்டத்தில் கண்ட ஒரு தொழிலில் வேலை செய்யும் ஒவ்வொரு வகைத் தொழிலாளருக்கும் குறைந்தபட்சமாக எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் சர்க்காரால் நிர்ணயம்

செய்யப்பட்ட பிறகு (1) அச்சம்பளத்திற்குக் குறையாமல் அந்தத் தொழிலாளருக்குச் சம்பளம் கொடுக்க, முதலாளி கடமைப் பட்டிருக்கிறார். செக்ஷன் 12; (2) இவ்விதம் நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறைவாக வாங்கிக்கொண்டு வேலை செய்வதாக ஒரு தொழிலாளர் சம்மதித்து ஒப்புக்கொண்டிருந்தாலும் அது செல்லாது. இச் சட்டம் அமுலுக்கு வருவதற்குமுன் ஒப்புக் கொண்டிருந்தாலும் பிந்தி ஒப்புக்கொண்டிருந்தாலும் செல்லாது.—செக்ஷன் 25; (3) இச் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறைவாக ஒரு தொழிலாளருக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டிருந்தால், ஆறு மாதத்திற்குள் இதற்காகச் சர்க்கார் நியமிக்கும் தனி அதிகாரியிடம் (Authority) மனுக் கொடுக்கலாம். அதிகாரி, முதலாளியை விசாரித்து, உண்மையில் குறைவான சம்பளம் கொடுக்கப்பட்டிருந்தால் அத்தொகையை அந்தத்தொழிலாளருக்குக் கொடுக்கும்படி உத்தரவு செய்வார். அத்துடன் தொழிலாளிக்கு நஷ்ட ஈடாக ஓர் தொகையையும் கொடுக்கும்படி உத்தரவிடலாம். இந்த நஷ்ட ஈடு என்பது, எவ்வளவு சம்பளம் குறைக்கப் பட்டதோ அதைப்போல் பத்து மடங்குவரை இருக்கலாம். ஆனால் வேண்டுமென்றே, முதலாளியைத் துன்புறுத்தவோ, பொய்யாக இவ்விதம் மனுக்கொடுத்தால், மனுக் கொடுத்தவர் ரூ. 50 வரை முதலாளிக்கு அபராதமாகக் கொடுக்கும்படியும் உத்தரவிடலாம். செக்ஷன் 20, 24; (4) அத்துடன் இச் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறைவாகக் கொடுப்பது ஒரு குற்றம். ஆறு மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். ஆனால் சம்பளக் குறைவு பற்றி முன் சொல்லப்பட்ட அதிகாரியிடம் மனுக் கொடுக்கப்பட்டு, அந்த அதிகாரியும் சம்பளம் குறைவாகக் கொடுக்கப்பட்டதென்று தீர்மானம் செய்த வழக்குகளில், அதே அதிகாரி இது சம்பந்தமாய் கிரிமினல் வழக்கும் தொடரலாம் என்று அனுமதி கொடுத்தால் மட்டில் கிரிமினல் கேஸ் கொடுக்கலாம். இச் சட்ட இன்ஸ்பெக்டர் அல்லது அவருடைய அனுமதி பெற்றவர்தான் கிரிமினல் வழக்குத் தொடங்க முடியும்-செக்ஷன் 22.

# வரிகள்

## வருமானவரி (திருத்த) சட்டம் 1950.

[The Indian Income Tax Amendment Act, 1950. 1950 ஆம் வருடத்திய 71 ஆவது (மத்திய) சட்டம் இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டு 23-12-1950 ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 23-12-1950 தேதியுள்ள இந்தியா கெஜட்—விசேஷ வெளியீடு— பாகம் II- செக்ஷன் 1, பக்கம் 281ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.]

வருமான வரிச் சட்டத்தைப் (Indian Income Tax Act) பற்றிய ஒரு வழக்கில் 26-5-1950ல் நமது சுப்ரீம் கோர்ட்டால் ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டது. அத்தீர்ப்பின் விவரம் என்னவென்றால்:—வருமான வரி விதிப்பதற்காக ஒருவருடைய வருமானம் எவ்வளவு என்று கணக்கு செய்வதில், அவருக்குச் சொந்தமான வீடுகள், கட்டடங்கள் அவைகளைச் சேர்ந்தாற்போல் இருக்கும் நிலங்கள் இவைகளிலிருந்து அவர் நியாயமாக அடையக்கூடிய வாடகைத் தொகையும் (Bonafide annual value) அவருடைய 'வருமான'மாகச் சேர்த்துக் கொள்ளப்படும். அதற்கு வருமான வரி உண்டு. இந்த 'நியாய வாடகை'த் தொகையை எப்படி கணக்கு செய்ய வேண்டுமென்று செக்ஷன் 9 ல் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று என்ன வென்றால்—அக்கட்டடம் அல்லது சொத்தின் ஜாமீன் ஜவாப்தாரியின் பேரில் வருடா வருடம் ஏதாவது தொகைகள் கொடுக்கப்பட வேண்டியிருந்தால் (annual charge) அத்தொகையை 'நியாய வாடகை'த் தொகையில் கழித்துக் கொள்ளலாமென்று இருக்கிறது. ஆனால் வருடம் ஒரு முறையோ, இரு முறையோ அச்சொத்துக்காக முனிசிபாலிடி, கார்ப்பொரேஷன் போன்ற

ஸ்தலஸ்தாபனங்களுக்கு அதன் சொந்தக்காரர் கொடுக்க வேண்டிய முனிசிபல் வரித் தொகைகளையும் கழித்துக் கொள்ளலாமா? முனிசிபல் முதலிய ஸ்தல ஸ்தாபனச் சட்டங்களில், அவ் வரிகளுக்கு 'சொத்து ஜவாப்தாரி' என்று இருக்கிறதே—என்ற பிரச்னை அந்த வழக்கில் ஏற்பட்டது. அது பம்பாய் வழக்கு. இன்கம் டாக்ஸ் டிரிபுனலும், பம்பாய் ஹைகோர்ட்டும், முனிசிபல் வரிகளைக் கழித்துக் கொள்ளக் கூடாதென்று அபிப்பிராயப் பட்டனர். அதன் மீது, வரி கொடுக்கவேண்டியவர், சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் பம்பாய் ஹைகோர்ட்டின் தீர்ப்பை அங்கீகரிக்கவில்லை. வருமான வரிச் சட்டத்தின் இது சம்பந்தமான வாசகங்களைப் பரிசீலனை செய்து, முனிசிபல் வரித் தொகைகளையும் 'நியாய வாடகை'த் தொகையில் கழித்துக் கொண்டு பாக்கியைத்தான் வருமானத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் தீர்ப்பு அளித்தனர். இது 26-5-1950 ல். (1950 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்— சுப்ரீம் கோர்ட் - பக்கம் 165.)

ஆனால் அது வரை இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் முனிசிபல் வரிகளை நியாய வாடகை வருமானத்தில் கழித்துக் கொள்வதில்லை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினால், முனிசிபல் வரிகளை யாவருக்கும் கழித்துக் கொள்ள வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமை ஏற்படாமலிருக்க 7-10-1950 ல் ஜனாதிபதி அவர்கள், பார்லிமெண்ட் கூடாமலிருந்ததால் ஓர் அவசரச் சட்டம் (Ordinance 28 of 1950) பிரகடனம் செய்தார்கள். அந்த அவசரச் சட்டம், வருமான வரிச் சட்டத்தின் வாசகத்தில் ஒரு திருத்தம் செய்தது. (இந்த அவசரச் சட்டம் 1950, நவம்பர் "வக்கீல்" இதழ், பக்கம் 6 ல் விளக்கப்பட்டிருக்கிறது.)

அவசரச் சட்டங்கள் பார்லிமெண்ட் கூடி 6 வாரங்களானவுடன் அமுல் இழந்துவிடும். ஆகையால் பார்லிமெண்ட் கூடிய பிறகு இந்த அவசரச் சட்டத்தை ரத்து செய்து, பார்லிமெண்டால் அதே விஷயங்கள் அடங்கிய ஒரு புதிய திருத்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இத்திருத்தச் சட்டப்படி வருமான வரிச் சட்டத்தின் 9 ஆவது செக்ஷனில் ஒரு விளக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது 'வருடா வருடம் சொத்தின் ஜவாப்தாரியின் மீது கொடுக்கப்படவேண்டிய தொகைகள்' (Annual charge) என்பதில் அச் சொத்துக்காக முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களுக்கோ, ராஜ்ய சர்க்காருக்கோ, மத்திய சர்க்காருக்கோ கொடுக்க வேண்டிய வரித் தொகைகள் சேராது என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புத் தேதியாகிய 26-5-1950-க்குப் பிறகு, மேற்கண்ட அவசரச் சட்டம் வந்த 7-10-1950-க்குள், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் ஆதாரத்தைக் கொண்டு எவருக்காவது, வருமானவரி அதிகாரிகள், முனிசிபல் முதலிய வரிகளை கழித்துக் கொண்டு வருமானம் கணக்கு செய்திருந்தாலும், மறுபடி அவ்வரிகளைக் கழித்துக் கொள்ளாமல் கணக்கு செய்து, அவர்களுக்கு வரி போட, எல்லா வருமான வரி அதிகாரிகளுக்கும் இச் சட்டத்தால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (சுப்ரீம் கோர்ட்டில் வழக்காடி ஜெயித்தவருக்கு பட்டில் வழக்கில் கண்ட வருடங்களுக்கு — விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.)

## 1951-52 முதல் பாதி பரிகாரம்

இத்திருத்தச் சட்டப்படி 1-4-1951 முதல், முனிசிபாலிடி முதலிய ஸ்தலஸ்தாபனங்களுக்கு ஒருவர் கொடுக்க வேண்டிய வரிகளில் சரி பாதியை (அச்சொத்து வாடகைக்கு விடப்பட்டிருந்தால்) வாடகைதார் கொடுக்க வேண்டியதாக பாவிக்கப்படும். மேலும் வாடகைதார் கொடுக்கும் வாடகையிலிருந்து மேற்கண்டபடி அவர் கொடுக்க வேண்டிய சரி பாதி வரிகளை, சொந்தக்காரரே கொடுப்பதாக வைத்துக் கொள்ளப்படும். அதாவது 1-4-1951 முதல் வாடகைக்கு விடப்பட்டிருக்கும் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில், வாடகைத் தொகையில், முனிசிபல் முதலிய வரிகளின் சரி பாதியைக் கழித்துக் கொண்டு, பாக்கியையே 'வருமான'மாகக் கணக்கு செய்யப்படும். 31-3-1952 உடன் முடிவடையும் வருடத்திலும், அதற்குப் பிந்திய வருடங்களிலும், வரி விதிக்கும் போது மேற்கண்ட பரிகாரம் அளிக்கப்பட்டு வரும்.

187704

**இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.**

## பொதுச் சொத்தை, ஒருவர் மட்டில் அபிவிருத்தி செய்து அனுபவித்தால், மற்றப் பாகஸ்தர்களுடைய உரிமை என்ன?

**கோர்ட்: அலகாபாத் ஹைகோர்ட்**
**நீதிபதி: நீதிபதி சாப்ரு அவர்கள்**
**ஆதாரம்: 1950 ஆல் இந்தியா ரிபோர்டர்-அலகாபாத்-690.**

ஒரு தரிசு நிலம் இரண்டு நபர்களுக்குச் சொந்தமாக இருந்தது. அது மிகப் பள்ளத் தாக்காக இருந்ததால் சாகுபடிசெய்ய லாயக் கில்லாமல் தரிசாகவே இருந்து வந்தது. இரு சொந்தக்காரர்களில் ஒருவர் தம் சொந்தப் பணத்தைச் செலவு செய்து பள்ளத்தைத் தூர்த்து, மேடாக்கி அந்நிலத்தைச் சாகுபடிக்கு லாயக்காகச் செய்தார். அதைத் தாமே பயிர் இட்டு, சாகுபடியும் செய்து வந்தார். இவர் இப்படிச் செய்வதை மற்றவர் ஆட்சேபிக்க வில்லை. ஐந்தாறு வருடங்கள் அவர் இதைப் பார்த்துக் கொண்டே சும்மா இருந்து விட்டார். பிறகு கோர்ட்டில் தாவா செய்தார். நிலத்தைப் பிரித்து, தமக்குப் பாகம் கிடைக்கச் செய்யவேண்டுமென்று அவர் தாவா செய்ய வில்லை. பிரதி வாதியால் செலவு செய்து செப்பனிடப்பட்ட நிலங்களை, அவருடன் தாமும் சேர்ந்து அனுபவிக்க வேண்டுமென்று மட்டில் தாவாவில் பரிகாரம் கேட்டிருந்தார்.

ஒரு நிலம் இரண்டு நபர்களுக்குச் சொந்தமாக இருந்தால் அதை அனுபவிக்கும் உரிமை இருவருக்கும் உண்டு. பொதுவாக உள்ள ஒரு சொத்தில், அதன் சொந்தக்காரர்களில் ஒருவர் அதில் பிரவேசிக்கக் கூடாதென்றோ அவர் அதை அனுபவிக்கக் கூடாதென்றோ தடுக்க மற்றவருக்கு உரிமையில்லை. அப்படி ஒருவர் தடுத்தால் அத்தடையைக் கோர்ட் மூலம் நீக்கி, பரிகாரம் தேடிக்கொள்ளலாம்.

மேலும் பொதுச் சொத்தின் சொந்தக்காரர்களில் எவருக்கும் வேறு ஒரு உரிமையும் உண்டு. அதாவது பொதுச் சொத்தைப் பாகம் செய்து, தமக்குள்ள வீதத்தைத் தாம் மட்டில் பிரத்தியேகமாக அடைந்து அனுபவிக்கும்படி தம் உரிமையை மாற்றிக் கொள்ளலாம். இதற்காகப் பாகப் பிரிவினை வழக்கும் போடமுடியும்.

இந்த இரண்டு பரிகாரங்களில் எதை வேண்டுமானாலும் ஒரு பாகஸ்தர் தேடிக் கொள்ளலாம். இதுதான் சாதாரண விதி. ஆனால் ஒரு குறிப்பிட்ட வழக்கில் காணக்கூடிய நியாய அநியாயங்களை உத்தேசித்து, சில வழக்குகளில் நீதிபதிகள் இந்த உரிமையையும் மறுத்திருக்கின்றனர். அவ்வித வழக்குகளில் இது ஒன்று.

தரிசாகவும் உபயோக மற்ற நிலைமையிலும் பல வருடங்களாகக் கிடந்த ஒரு நிலத்தை அதன் பாகஸ்தர்களில் ஒருவர் தம் கைப் பணத்தைப் போட்டுப் பிரயாசைப்பட்டுச் சாகுபடிக்கு லாயக்காகச் செய்வதை இவ்வழக்கின் வாதி ஐந்தாறு வருடங்கள் கவனித்துக் கொண்டே இருந்து, திடீரென்று வருமானம் வரும் சமயத்தில், தம் உரிமையை, அதாவது

ஒரு பாகஸ்தர் என்ற முறையில் தாமும் அந் நிலத்தை அனுபவிக்கக் கூடிய உரிமையை வற் புறுத்தவேண்டுமென்று கேட்டு இவ்வழக்கின் வாதி தாவா செய்தார். முன் விளக்கப் பட்ட பொது விதியை அனுசரித்து முதல் கோர்ட்டில் அவர் ஜயமடைந்தார். ஆனால் அடுத்த கோர்ட்டிலும் அதற்குமேல் அலகாபாத் ஹைகோர்ட்டிலும் அவருடைய கட்சி தோல்வி யடைந்தது.

இது சம்பந்தமான விதியையும் விதி விலக்கு களையும் உயர் நீதிபதி விளக்கி இருக்கின்றனர்.

இவ்விதம் ஒரு பாகஸ்தர் நிலத்தை அபி விருத்தி செய்து அனுபவித்து வந்தால், சும்மா இருந்தவர் தம் பாகத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றாவது, தம் பாகத் திற்குள்ள வருமானம் கிடைக்க வேண்டுமென் றாவது கேட்கலாமே ஒழிய தாமும்கூட நிலத்தை அனுபவிக்கவேண்டுமென்று கேட் டால் அதை ஏற்றுக் கொள்வது நியாயமாகா தென்றும், இதற்கு ஆதாரமாக ஓர் பிரிவி கவுன்சில் தீர்ப்பையும் எடுத்துக் காட்டி வாதியின் தாவாவும் அப்பீலும் தள்ளப்பட்டன.

[இவ்வித சந்தர்ப்பங்களில் தம்முடைய பாகத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டு மென்று ஒருவர் தாவா செய்தாலும், அதற்கான சில நியாயங்களை நீதிபதிகள் அனுசரித்திருக்கின் றனர். ஆனால் இவ்வழக்கில் அவ்விதப் பிரச்னை ஏற்பட வில்லை.]

## திறப்பு நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி. நிலப்பட்டாதார்களின் உரிமையும் சர்க்காரின் கடமையும்.

**கோர்ட்: சென்னை ஹைகோர்ட்**
**நீதிபதி: கனம் நீதிபதி விசுவநாத சாஸ்திரி அவர்கள்.**
**ஆதாரம்: 1950 (2) மதராஸ் லா ஜர்னல் —658.**

திறப்புக் கிராமங்களில் உள்ள நன்செய் நிலங் களின் பட்டாதார்களுக்கு (அதாவது ரயத்து வாரிப் பட்டாதார்களுக்கு) நீர்ப் பாசனம் சம்பந்தமான ஒரு உரிமை உண்டு. அதாவது தங்களுடைய நன்செய் நிலத்தில் சாகுபடி செய்வதற்குத் தேவையானதும் போதுமானது மான தண்ணீரை, சர்க்கார் வாய்க்கால்களி லிருந்து (Government channels) வழக்கம் போல் அடைந்து வரும் உரிமை. ஒரு வாய்க்கா லில் ஓடும் தண்ணீரைக் கொண்டு பல கிராமங் களிலுள்ள நன்செய் நிலங்கள் சாகுபடி ஆக வேண்டியதாக இருக்கும். அவர்களுக்குள் தண்ணீரை விநியோகம் செய்ய வேண்டிய பொறுப்பு சர்க்காருடையது. இதைச் சர்க்காரின் உரிமை என்றும் சொல்லலாம். அதாவது ஒரு சர்க்கார் வாய்க்காலில் ஓடும் தண்ணீரைக் கொண்டு எந்த எந்தக் காலங்களில் எந்த எந்த நிலங்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்யப்படு மென்று உத்தரவிட, சர்க்காருக்கு ஓர் உரிமை உண்டு. இதை எந்த ரயத்து வாரிப் பட்டா தாரும், சாதாரணமாய் ஆட்சேபிக்க முடியாது. வழக்கமாக எந்த இடத்திலிருந்து ஒரு கிராமத் தின் பட்டாதார்கள் தங்கள் நன்செய் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக் கிறார்களோ, அதை விட்டு வேறு ஒரு இடத் திலிருந்து ஜலம் பாய்ச்சிக் கொள்ள வேண்டு மென்று சர்க்கார் சொல்லலாம். மாமூலாக, எந்த நேரங்களில் ஒரு கிராமத்தின் பட்டாதார்கள் தங்கள் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டுவருகிறார்களோ, அவ்வாறு இல்லாமல் வேறு நேரங்களில்தான் ஜலம் பாய்ச்சிக் கொள்ளவேண்டுமென்றும் சர்க்கார் உத்தர விடலாம். எப்பொழுதும் உள்ள வசதிக் குக் குறையாமல், ஒரு கிராமத்தில் உள்ள நன் செய் நிலக்காரர்கள் தங்கள் நன்செய் நிலங் களுக்குத் தேவையானதும் போதுமானது மான ஜலத்தை வேறு முறையில் அடைந்து வரும் விதம், சர்க்கார் நீர்ப்பாசன முறையை மாற்றி னாலும், அதையும் பட்டாதார்கள் ஆட்சேபிக்க முடியாது. ஒரு ஆயக்கட்டிலுள்ள எல்லாப் பட்டாதார்களுக்கும் அத்தண்ணீர் நியாயமான முறையில் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும் என்பதற்காகச் சர்க்கார் இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ஒரு வாய்க்காலில் மாமூலாக ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீர் எப்பொழுதும் போல் ஓடிக்கொண்டே இருக்க வேண்டுமென்றாவது, அதைக்கொண்டு வேறு புதிதாக ஒருவருக்கும் தண்ணீர் வசதிகள்

ஏற்படுத்தக் கூடாதென்றுவது சொல்ல எந்த ரயத்துவாரிப் பட்டாதாருக்கும் பாத்தியமில்லை. மேலும் எப்படியாவது ஒரு ரயத்துவாரிப் பட்டாதாருக்குப் போதுமான ஜலத்தைச் சப்ளை செய்ய வேண்டுமென்ற கடமையும் சர்க்காருக்கு இல்லை. மழை இல்லாத காரணத்தினுலோ, வாய்க்கால் எந்த ஆற்றில் பிரிகின்றதோ அந்த ஆற்றிலேயே ஜலம் இல்லாத காரணத்தினுலோ ஒரு ரயத்துவாரிப் பட்டாதாருக்குத் தேவையான ஜல சப்ளை இல்லாவிட்டால் அதற்குச் சர்க்கார் பொறுப்பாளி அல்ல. ஆனுல் அகப்படும் ஜலத்தை மேற்கண்டவாறு பகிர்ந்து கொடுக்க மட்டில் சர்க்காருக்கு ஒரு விசேஷ உரிமை உண்டு.

ஆகையால் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில்தான் ரயத்துவாரி நன்செய் நிலப் பட்டாதார்கள் சர்க்கார் மீது தாவா தொடரலாம்; நஷ்டம் கேட்கலாம். அதாவது, எப்பொழுதும்போல் ஒரு பட்டாதார் தம் நன்செய் நிலங்களுக்குச் சாகுபடிக்காக உபயோகித்து வரும் ஜலத்தின் அளவைச் சர்க்கார் குறைத்து, அதனுல் பட்டாதாருக்கு நஷ்டம் ஏற்படும்விதம் ஒரு வாய்க்காலின் ஜலத்தை வேறு இடத்திற்குச் சர்க்கார் திருப்பிவிட்டால், அது தவறு. நஷ்டம் அடைந்த அல்லது அடையக்கூடிய பட்டாதார்கள்தான் சர்க்கார் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அப்படி இல்லாவிட்டால் நீர்ப் பாசன வசதி சம்பந்தமாய் எந்தப் பட்டாதாரும் சர்க்கார் மீது யாதொருவித நடவடிக்கையும் எடுக்க முடியாது. இதுதான் நீர்ப்பாசன சம்பந்தமாய் 1872 லிருந்து ஏற்பட்ட சென்னை ஹைகோர்ட்டாரின் பல தீர்ப்புகளின் கருத்து.

**பிரஸ்தாப வழக்கில்**:—தென் பெண்ணை ஆற்றில் பிரியும் ஒரு வாய்க்கால் மூன்று திறப்புக் கிராமங்களுக்குப் பாய்ச்சல் உள்ளது. அவைகளில் மாமூலாக இரண்டு கிராமங்கள் சேர்ந்து ஒரு 24 மணி நேரத்திலும், மூன்றுவது கிராமத்திற்கு ஒரு 12 மணி நேரமும் தண்ணீர்ப் பாசனம் நடந்து கொண்டிருந்தது. இந்த மூன்று கிராமங்களுக்குமிடையே நீர்ப் பாசனம் சம்பந்தமான சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன. ஆகையால், ஹோசூர் சப் கலெக்டர் 1940 ல் ஒரு உத்தரவு செய்தார். அதாவது முதல் இரண்டு கிராமங்களுக்கும் இரவில் 12 மணி நேரத்திலும், மூன்றுவது கிராமத்திற்குப் பகலில் 12 மணி நேரத்திலும், அந்த வாய்க்கால் ஜலம் பாய வேண்டியதென்று. இதை ஜில்லா கலெக்டரும் உறுதி செய்தார். முதல் இரண்டு கிராமத்தின் பட்டாதார்களும் இந்த உத்தரவு தவறு என்று மூன்றுவது கிராமப் பட்டாதார்கள் மீதும், சர்க்கார் மீதும், ஒரு தாவா செய்தார்கள். மாமூலாகத் தாங்கள் 24 மணி நேரமும் பிரதிவாதி கிராமத்தினர் 12 மணி நேரமும் வீதாசாரமாகத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டு வரும் வழக்கத்தைக் கலெக்டர் மாற்றியது செல்லாதென்றும் நஷ்டம் ரூ. 100 தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றும் அத் தாவாவில் கேட்டிருந்தனர். முன்சீப் கோர்ட்டிலும் அப்பீலை விசாரித்த சப் கோர்ட்டிலும், வாதிகள், தாவாவில் பிரஸ்தாபிக்கும் மாமூல் முறையை ருசுப்பிக்க வில்லை என்றும், கலெக்டரின் உத்தரவு இரு திறப்புக்கும் நியாயமாகவே இருக்கிறதென்றும், வாதிகளுக்கு யாதொரு நஷ்டமும் ஏற்பட வில்லை என்றும், அபிப்பிராயப்பட்டு வாதிகளின் வழக்குத் தள்ளப்பட்டது. அதன் பேரில் நடந்த சென்னை ஹைகோர்ட் இரண்டாவது அப்பீலில் நீதிபதி அவர்கள் மேலே கண்டவாறு இது சம்பந்தமான சட்டத்தை விளக்கி இருக்கின்றனர். மாமூல் பாசன நேரங்களும் வழக்கமும் மாற்றப்பட்டனவா என்ற பிரச்னை எழவில்லை என்றும்; கலெக்டர் புதிதாகச் செய்த உத்தரவினுல் வாதிகளின் நன்செய் நிலங்களுக்கு அவசியமானதும் போதுமானதுமான ஜலம் கிடைக்கவில்லை என்றும் அதனுல் தங்கள் நன்செய் நிலங்களைச் சரிவர சாகுபடி செய்ய முடியாமல் நஷ்டம் ஏற்பட்டு விட்டதென்றுவது, நஷ்டம் ஏற்படக் கூடியதாக இருக்கிறதென்றுவது பிராதில் வாதிகள் குறை சொல்ல வில்லை என்றும், அவ்விதம் இல்லாதிருந்தால், வாதிகளுக்கு வியாஜ்ய மூலமே, அதாவது வழக்குப் போடும் பாத்தியமே சட்டத்தில் கிடையாதென்றும் அபிப்பிராயப்பட்டு வாதிகளின் அப்பீலும் தள்ளப்பட்டது.

# கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில் தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே. கார்டுகளில் எழுதப்படும் கேள்விகளும் பென்சிலால் எழுதப்படும் கேள்விகளும் கவனிக்கப்படமாட்டா.**

**கேள்விகளுக்கு நேரில் பதில் கிடைக்க:** "வக்கீல்" பத்திரிகையில் வரிசைக் கிரமமாய்ப் பதில் வெளிவரும் முன்பே பிரத்யேகமாகத் தபால் மூலம் நேராகப் பதில் கேட்கும் நேயர்கள் கேள்வி அடங்கிய தாளை **ரிஜிஸ்டர் தபால் மூலம்** காரியாலயத்திற்கு அனுப்புவதுடன் அத்துடன் தமது விலாசம் எழுதப்பட்ட கவர் ஒன்றும் **ரூபாய் இரண்டு** தபால் ஸ்டாம்பும் சேர்த்து அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனி ஸ்டாம்பு அனுப்பவேண்டும். பிரத்தியேக பதில் அனுப்பப்படும்.

**18. கேள்வி:** (நாராயணசாமி - கோயமுத்தூர்) ஒரு முனிசிபாலிட்டி எல்லைக்குட்பட்டிருக்கும் ஒரு வீட்டிற்கு முனிசிபாலிடியார் விதித்திருக்கும் வரியை, ஒருவர் 15 வருடகாலமாகச் செலுத்தி வருகிறார். ஷை கட்டடத்தின் 3-ல் 1 பாகத்தைத் தற்சமயம் அதிகப்படியான வாடகைக்குக் கொடுத்திருந்தால், முனிசிபாலிடியார் அந்த வாடகையை ஆதாரமாகக் கொண்டு, பூராக் கட்டடத்திற்கும் அதிகப்படியான வாடகையை நிர்ணயம் செய்து மூன்று மடங்கு வரி விதிப்பது நியாயமா?

**பதில்:** நியாயம்தான். அவ்விதம் செய்ய டிஸ்டிரிக்ட் முனிசிபாலிட்டி சட்டம் இடமளிக்கின்றது.

**19. கேள்வி:** (துரைராஜு - திண்டுக்கல்) தற்பொழுது சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி முனிசிபாலிட்டிக்குச் செலுத்தும் வீட்டு வரிக்கு வருமான வரி விலக்கு உண்டா? எந்த வருஷம் எந்தத் தேதி முதல் உண்டு?

**பதில்:** முனிசிபாலிட்டிக்குச் செலுத்தும் வீட்டு வரிக்கு வருமான வரி விலக்கு உண்டென்று சுப்ரீம் கோர்ட்டால் ஒரு பம்பாய் கேஸில் 26-5-1950-ல் தீர்ப்பளிக்கப்பட்டது. வருமான வரிச்சட்டத்தின் வாசகத்தைச் சுப்ரீம் கோர்ட்டார் மேற்கண்ட விதம் அர்த்தம் செய்தனர். ஆனால் ஒரு மத்திய சர்க்கார் சட்டத்தின் மூலம் வருமான வரிச் சட்டமே திருத்தப்பட்டு விட்டது. இச் சட்டப்படி முனிசிபல் வரி முதலிய வரிகளுக்கு வருமான வரி விலக்குக் கிடையாது. ஆனால் 1-4-1951 முதல் பாதி வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (இந்த இதழ் "வரிகள்" என்ற பகுதியைப் பார்க்கவும்.)

**20. கேள்வி:** (குப்புசாமி-மதுரை) கைத்தறி ஜவுளி உற்பத்தி வியாபாரிக்கு வருடம் 1-க்கு ரூ. 7500-க்கு உள்பட்ட வியாபாரம் நடந்தால், விற்பனை வரிச் சட்டப்படி வியாபாரி லைசென்சு வாங்க வேண்டுமா?

**பதில்:** வேண்டாம்.

**21. கேள்வி:** (பழனியப்பன் - ஆத்தங்குடி) புத்தி சுவாதீனமில்லாதிருக்கும் ஒரு விதவைக்கு ஒரு மைனர் சுவீகாரப் புதல்வன்

இருக்கிறான். அந்த விதவையிடம் 'பவர்' வாங்கி ஒருவர் அவளுடைய சொத்துக்கள் சம்பந்தமாய் செய்யும் நடவடிக்கைகள் சுவீகார மகனைக் கட்டுப் படுத்துமா?

பதில்: புத்தி சுவாதீன மில்லாதவள் கொடுக்கும் பவர் செல்லாது. அதை ஆதாரமாக வைத்து ஒருவர் செய்யும் எவ்வித நடவடிக்கையும் செல்லாது.

22. கேள்வி: (ஷை) சொத்துக்களைச் சம்பாதித்த ஒரு இந்து முதலில் ஒரு சுவீகாரம் எடுத்துக் கொள்ளுகிறார். அச்சுவீகாரப் புதல்வன் கெட்ட நடவடிக்கை உள்ளவனென்று தெரிந்து அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து அவனை விலக்கி விட்டு, இரண்டாவது சுவீகாரமாக வேறு ஒரு பையனை எடுத்துக் கொண்டால் இரண்டாவது சுவீகாரம் செல்லுமா? முதல் சுவீகாரத்தானுடைய புதல்வன் மைனர் மேஜரானவுடன் இரண்டாவது சுவீகாரம் செல்லாதென்றும் தனக்குத்தான் சொத்துக்கள் கிடைக்கவேண்டுமென்றும் வழக்காடினால் சொத்துக்களை அடைய முடியுமா?

பதில்: பிள்ளை இல்லாதவர்தான் சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம். சொந்த மகனோ சுவீகார மகனோ இருக்கும் போது மறுபடியும் சுவீகாரம் எடுத்துக் கொள்வது செல்லாது. சொத்துக்களைச் சம்பாதித்தவர், தம் சொத்துக்களைக் குறித்து எவ்விதமான பாராதீனமும் செய்யாமலும், உயில் மூலம் அவைகளை வேறு ஒருவருக்கும் கொடுக்காமலும் இறந்து போயிருந்தால், முதலில் எடுத்துக் கொண்ட சுவீகாரப் புதல்வனுடைய மகன், இறந்தவருடைய சொத்துக்களை வாரிசாக அடைய முடியும்.

23. கேள்வி: (வடிவேல் - மாரியம்மன் கோவில்) ஒருவர் 1924-ல் நிலத்தைப் பெர்தகம் வைத்து, பத்திர ஷரத்துப்படி வருடா வருடம் வட்டி கொடுத்தும், 1943-ல் அசல் தொகையில் கொஞ்சம் குறைத்துக் கொண்டு பாக்கி அசலை இரண்டாகப் பிரித்து, தாமே வேறு வேறு அனுபோக ஒத்திப் (போக்கியம்) பத்திரம், கடன் கொடுத்தவருக்கே, எழுதிக் கொடுத்து, கடன் கொடுத்து, கடன் வாங்கியவர் வசமே சொத்துக்கள் குத்தகைக்கு இருந்து வருகின்றன. இப்பொழுதுள்ள சட்டப்படிக்கு வருடம் 1-க்கு 30-ல் ஒரு பங்கு அசல் கழிவு ஏற்படுமோ? எந்தத் தேதியிலிருந்து ஏற்படும்?

பதில்: அசல் தொகையில் வருடம் 1-க்கு 30-ல் 1-பங்கு கழிவு ஏற்படாது. ஆனால் 1924-ல் வாங்கிய சாதா கடனுக்கு எவ்விதம் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் பரிகாரமளிக்குமோ, அதே பரிகாரம் இக்கடனுக்கும் அளிக்கப்படும்.

24. கேள்வி: (துரைராஜன் - சேலம்) ஒரு கடையில் ஒரு மூட்டை துவரையைப் பருப்பாகச் செய்து கொடுப்பதற்கு ரூ. 1 வீதம் வாடிக்கையாகக் கூலி பெற்று வரும் ஒருவர் ஷாப் சட்டப்படி ஒரு 'சிப்பந்தி' ஆவாரா? அவருக்கு ஷாப் சட்டம் உண்டா?

பதில்: உண்டு.

25. கேள்வி: (வேலுசாமி-லிங்கத்தூர்) ஒரு பாகப் பிரிவினை ஆகாத (இந்து) குடும்பத்தில் இரு சகோதரர்கள். மூத்தவர் மேஜர், இளையவர் மைனர். மேஜரான மூத்த சகோதரர் குடும்பம் நடத்தி வந்தபோது அவர் பெயருக்கே சில புதிய சொத்துக்களைக் கிரயம் வாங்கிக் கொண்டால், அச் சொத்துக்களில் இளைய சகோதரருக்குப் பாத்தியமுண்டா?

பதில்: புதிய சொத்துக்கள் குடும்ப ஜீவனையிலிருந்து வாங்கப்பட்டிருந்தால் அவைகளில் இளைய சகோதரருக்கும் பாத்திய முண்டு. ஆனால் அச் சொத்துக்களை வாங்கியவர், குடும்பச் சொத்துக்களின் அல்லது அதன் வரும்படியின் உதவி யில்லாமலே சுய சம்பாத்தியத்தைக் கொண்டு வாங்கி இருந்தால், அச் சொத்தில் இளைய சகோதரருக்குப் பாத்திய மில்லை.

26. கேள்வி: (ஷை) ஒரு பாகப் பிரிவினை ஆகாத (இந்து) குடும்பத்தில் அண்ணன் தம்பி இருவர். தம்பிக்கு இரண்டு மகன்கள் உண்டு. அண்ணனுக்கு ஒரு பெண்ணும் மனைவியும் உண்டு. அண்ணன் இறந்தால் அவருடைய சொத்து யாருக்குப் பாத்தியப்படும்?

பதில்: அண்ணனுடைய சரிபாக வீதத்தை அவர் மனைவி தம் ஆயுள்வரை அனுபவிக்கலாம். அவள் ஆயுளுக்குப்பின் சொத்துக்கள் தம்பியைச் சேரும்.

**27. கேள்வி:** (நடராஜன் - சரம்பக்குடி) (1) ஒரு ஸ்தாபனத்தில் ஒரு சிப்பந்தி ஷாப் சட்டம் அமுலுக்கு வரு முன்பு தொடர்ச்சியாய் 4-வருடம் வேலை பார்த்து வந்து, நடுவில் இரண்டு வருடம் வேலை பார்க்காமல் இருந்து, இப்பொழுது மறுபடியும் அதே ஸ்தாபனத்தில் வேலை பார்த்தால், அச்சிப்பந்திக்கு ஷாப் சட்டப்படி 'காஷுவல் லீவு' உண்டா? (2) காஷுவல் லீவு வேண்டுமென்று லீவு லெட்டர் எழுதிக் கொடுக்காமல் ஒரு சிப்பந்தி ஒரு நாள் சில அசௌகரியங்களினால் வேலைக்குப் போகாமல் இருந்து விட்டால், அவருக்குச் சம்பளம் பிடிக்கலாமா?

**பதில்:** ஒரு சிப்பந்தி அதற்கு முன் வேலை பார்த்திருந்தாலும் பார்க்காவிட்டாலும் 'காஷுவல் லீவு' எடுக்க உரிமை உண்டு. தகுந்த காரணங்கள் இருந்தால் அதற்காக வருடத்தில் 12 தினங்கள் காஷுவல் லீவு எடுக்கலாம். ஆனால் எவ்வித லீவும் எடுத்துக் கொள்ளாமல் வேலைக்கு வராதிருந்தால் தான் சம்பளப் பிடித்தம் செய்ய முடியும். லீவு வேண்டுமென்று முன் கூட்டியே தெரிவிக்கா விட்டாலும் பிறகு அதைக் கேட்கச் சட்டத்தில் தடை ஒன்றுமில்லை.

**28. கேள்வி:** (ராஜகோபால பிள்ளை - பூவனூர்) கிராம நத்தத்தில் உள்ள வீடு தோட்டம் இவைகளின் மீது ஏற்பட்டிருக்கும் ஒத்திக்குக் கழிவு உண்டா?

**பதில்:** கடன் வாங்கியவர் விவசாயியாக இருந்தால் உண்டு.

**29. கேள்வி:** (முத்துசாமி-ஈரோடு) 1935ல் ஒரு இந்து விவசாயி ஒரு இந்து பெண்ணிடம் ஸ்தாவர சொத்துக்களைக் கிரயத்துக்கு வாங்கி இதுவரை அனுபவித்து வருகிறார். கிரயத் தேதியில் அப் பெண்ணுக்கு ஒரு மைனர் 17-வயதில் உண்டு. சொத்துக்கள் பூர்வீக குடும்பச் சொத்து. கடன் கிடையாது. மகன் சொத்துக்களைத் திருப்ப முடியுமா?

**பதில்:** இந்தச் சட்டப்படி சொத்தைத் திருப்ப மகனுக்கு ஓர் உரிமை இருந்தாலும் அவ்வுரிமை இப்பொழுது காலாவதிச் சட்டத்தால் மறைந்து விட்டதாக ஏற்படலாம்.

**30. கேள்வி:** (சந்திரசேகரர் - துறையூர்) ஒருவனுடைய மரம் மற்றவருடைய வீட்டின் அத்திற்கு ஒரு அடி தள்ளி இருக்கிறது. அந்த மரத்தால் வீட்டுக்காரருக்கு ரொம்பவும் இடஞ்சலாயிருக்கிறது. மரக்காரர் மரத்தை வெட்ட மறுத்தால், வீட்டுக்காரர் அதை வெட்டுவது குற்றமாகுமா? குற்றமானால் அந்த மரத்தை அகற்றுவது எப்படி?

**பதில்:** அவரவருடைய நிலத்தில் அவரவர் இஷ்டப்பட்ட மரங்களைப் பயிர் செய்து கொள்வதற்கு, சாதாரணமாய், சட்டத்தில் யாதொரு தடையுமில்லை. ஆனால் ஒருவருடைய மரத்தின் அடிப்பாகமோ, கிளைகளோ வேறு ஒருவருடைய நிலத்திற்குள்ளோ, மேலோ பரவுவதை அவர் ஆட்சேபிக்கலாம். தம் நிலத்திற்குள்ளோ மேலோ, நீட்டிக் கொண்டிருக்கும் பாகங்களை மட்டில் அவரே அகற்றிவிடலாம். இது குற்றமாகாது. அபாயமாக இருக்கும் மரங்களை வெட்டும்படி உத்தரவிட முனிசிபல் சட்டத்திலும் ஸ்தல ஸ்தாபனச் சட்டத்திலும் நிர்வாக அதிகாரிகளுக்கும் அதிகாரமுண்டு.

**31. கேள்வி:** (சையது முர்தஜா - சத்தியமங்கலம்) ஒரு முஸ்லீமுக்கு முதல் சம்சாரத்தின் மூலம் ஒரு பெண். அப்பெண்ணுக்கு ஒரு மகன். இவன் அக்குடும்பத்திலேயே வளர்க்கப்படுகிறான். சம்சாரம், பெண் இருவரும் இறந்து போய் விட்டார்கள். பிறகு அவர் இரண்டாவது சம்சாரம் மணம் செய்துகொண்டு அவளுக்கு ஒரு பெண் மட்டில் உண்டு. யாதொரு விதமான தஸ்தவேஜியும் எழுத்து மூலம் எழுதி வைக்காமல் அம் முஸ்லீம் இறந்து போனால், முதல் சம்சாரத்தின் பெண்ணுடைய மகனுக்கு இறந்தவருடைய சொத்தில் பங்கு உண்டா?

**பதில்:** இல்லை.

# கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
## இதர சர்க்கார் அறிக்கைகள்

### வனஸ்பதி

### வனஸ்பதி வியாபாரம் செய்யும் இடத்தில் கொழுப்பு வியாபாரம் கூடாது.

1947-ஆம் வருடத்திய தாவர எண்ணெய்ச் சரக்குகள் கட்டுப்பாடு உத்தரவின் (Vegetable oil Products Control Order — 1947) 5ஆவது பிரிவை அனுசரித்து தாவர எண்ணெய்ச் சரக்குக் கண்ட்ரோலரால் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

1. தாவர எண்ணெய்ச் சரக்குகளில் (வனஸ்பதி) வியாபாரம் செய்யும் எந்த வியாபாரியும் அது வியாபாரம் செய்யும் இடங்களிலும் ஸ்டாக் செய்யும் இடங்களிலும் எவ்வித கொழுப்பு செய்யையும் (Animal ghee) ஸ்டாக் செய்யவும், விற்கவும் கூடாது.

2. தாவர எண்ணெய்ச் சரக்கு (வனஸ்பதி) வியாபாரிகள் வியாபார ஸ்தலத்தில், யாவருக்கும் தெரியும்விதம் பிரதேச பாஷையில், எவ்வித தாவர எண்ணெய் அங்கே விற்கப் படுகிறதென்று விளம்பரம் செய்து வைக்க வேண்டும். அதாவது: 'கடலைத்தாவர எண்ணெய்' Hydrogenated Ground-nut oil); 'கடலை — தேங்காய் — தாவர எண்ணெய்' (Hydrogenated Ground-nut and Cocoanut oil); 'கடலை — பருத்திக் கொட்டை தாவர எண்ணெய்' (Hydrogenated Ground-nut and Cotton Seed oil) என்று விளம்பரப் படுத்த வேண்டும்.

3. வியர்பார இடத்தில் கண்ட்ரோலரால் அவ்வப்பொழுது நிர்ணயம் செய்யப் பட்டிருக்கும் மொத்த வியாபார விலையையும் சில்லறை வியாபார விலையையும் யாவருக்கும் தெரியும் இடத்தில் விளம்பரப்படுத்தி இருக்கவேண்டும்.

4. தாவர எண்ணெய் அடங்கிய ஒவ்வொரு டின்னிலும், அது உற்பத்தி செய்யப்பட்ட வருடமும் மாதமும் காணப்பட்டிருக்கிறதா என்று வியாபாரிகள் கவனிக்கவேண்டும். தேதியை டின் மீது ரப்பர் ஸ்டாம்பினாலோ, எம்பாஸ் செய்தோ, போடலாம்.

5. மேலே கண்ட 1, 2, 3 விதிகள் 23—12—1950ல் அமுலுக்கு வந்து விட்டன. 4ஆவது விதி 1—1—1951ல் அமுலுக்கு வந்து விட்டது.

(23—12—1950 இந்தியா கெஜட்—பாகம் II-செக்ஷன்-3, பக்கம் 1104. S. R. O 1090)

### சரக்கு சப்ளை-விலை அவசரச் சட்டத்தின்கீழ் சர்க்கார் உத்தரவுகள்

**சிசு ஆகாரங்கள்:** முந்திய உத்தரவு ரத்து செய்யப்பட்டு சிசு ஆகாரங்களுக்குச் சில்லறை வியாபாரத்தில் கீழ்க்கண்ட உச்ச விலை மத்திய சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விலைக்கு மேல் விற்கக் கூடாது.

| சரக்கு | சில்லறை வியாபார விலை |
|---|---|
| 1. ஹார்லிக்ஸ் 1 பவுண்ட். | ரூ 3-8-0. பாட். 1க்கு |
| 2. ஹார்லிக்ஸ் ½ பவுண்ட் | ரூ 2-0-0 (ஷை) |
| 3. கிளாக்ஸோ 1 பவுண்ட் | ரூ 3-2-0 டின் (ஷை) |
| 4. கிளாக்ஸோ 2 பவுண்ட் | ரூ 5-15-0 (ஷை) |
| 5. ஆஸ்டர்மில்க் 1 பவுண்ட் | ரூ 3-3-0 (ஷை) |
| 6. ஆஸ்டர்மில்க் 2 பவுண்ட் | ரூ 6-0-0 (ஷை) |

(23—12—1950 இந்தியா கெஜட்-பாகம் II-செக்ஷன் 3-விசேஷ வெளியீடு 995. S. R. O. 1103)

**எலக்ட்ரிக் பல்புகள் விலை:** முந்திய உத்தரவு ரத்து செய்யப்பட்டு எலெக்ட்ரிக் பல்புகளுக்குச் சில்லறை வியாபாரத்தில் கீழ்க் கண்டபடி உச்ச விலை நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. இவ்விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது.

| பல்பு விபரம். (ஸ்டாண்டர்ட் வோல்டேஜ் உள்ளவை. 100—130 200—300) | | ஒவ்வொரு பல்புக்கும் விலை. ரூ. அ. பை |
|---|---|---|
| 1. 5 வாட். | வாகுவம் | 1—6—0 |
| 10 ,, | ,, | 1—5—0 |
| 15 ,, முதல் 40 ,, | | 1—3—0 |
| 40 ,, | காஸ்பில்ட் | 1—6—0 |
| 60 ,, | ,, | 1—8—0 |
| 60 ,, | வாகுவம் | 1—4—0 |

| | | |
|---|---|---|
| 2. | பிராஸ்டெட் லாம்ப் (Frosted lamps) | அதே விதமுள்ள மேற் கண்ட சாதாரண பல்பைவிட ஒவ்வொரு பல்புக்கும் 1 அணு கூடுதல் |
| 3. | ஸ்ப்ரெயிட் லாம்ப் (Sprayed Lamp) | அதே விதமுள்ள சாதாரண பல்பைவிட 20% கூடுதல் |
| 4. | ஓபல், கலர், விளக்குகள் (Opal and natural coloured lamps) | ஷை 50% கூடுதல் |
| 5. | டேலைட் நீல பல்புகள் (Daylight blue lamps) | ஷை 33⅓% கூடுதல் |
| 6. | ஸ்டாண்டர்ட் அல்லாத பல வகைப்பட்ட வோல்டேஜ் உள்ளவை (Lamps of non-Standard or odd Voltages | ஷை 25 % கூடுதல் |

(S. R. O. 1040—13-12-1950 இந்தியா கெஜட்)

**சோதனை போட அதிகாரிகள்:** சரக்கு சப்ளை அவசரச் சட்டத்தின் 16 ஆவது பிரிவில் கண்ட அதிகாரங்களை, அதாவது இந்தக் கட்டுப்பாடு உத்தரவால் கட்டுப்பட்ட சரக்குகள் இருக்கும் இடங்கள், வண்டிகள், வாகனங்கள் முதலியவற்றைச் சோதனை போடவும், இக் கட்டுப்பாடு உத்தரவுக்கு மாருக வைக்கப் பட்டிருக்கும் சரக்குகளைக் கைப்பற்றி கோர்ட்டில் ஆஜர்படுத்தவும், சென்னை ராஜ்யத்திலுள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத எல்லா போலீஸ் அதிகாரிகளும் அவரவர் அதிகார எல்லைக்குள் செலுத்துமபடி மத்திய சர்க்கார் அவர்களுக்கு அதிகாரமளித்திருக்கின்றனர்.

(23—12—1950 இந்தியா கெஜட் - பாகம் II-செக்ஷன் 3—பக்கம் 1103-S.R.O 1085)

## காகிதம்

**"நியூஸ் பிரிண்ட்" கட்டுப்பாடு உத்தரவு (1950)** The Newsprint Control Order—1950. அமுலுக்கு வந்த தேதி **1-1-1951.** "நியூஸ் பிரிண்ட்" என்ற பத்திரிகைக் காகிதம் சம்பந்தமாய் மத்திய சர்க்காரால் 26-12-1950ல் இக்கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 30-12-1950ல் இதன் சில ஷரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. இது காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும். (1) தினசரிப் பத்திரிகைகளும், (2) நியூஸ் பிரிண்ட் காகிதத்தை உபயோகித்து, குறைந்தது மாதம் ஒரு முறையாவது பிரசுரம் செய்யப்பட்டு வரும் பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகளும் (Periodicals), (3) நியூஸ் பிரிண்ட் காகித வியாபாரிகளும்-இந்த உத்தரவால் கட்டுப்பட்டவர்கள். எந்தவித பத்திரிகைகளிலும் ஒரு பக்கத்தின் அளவு 432 சதுர அங்குலத்திற்கு மேல் போகக்கூடாது.

"தினசரிப் பத்திரிகைகள்" என்ருல் சப்ளிமெண்ட்கள் உட்பட வாரத்தில் குறைந்தது 6 தினங்களாவது பிரசுரம் செய்யப்படும் பத்திரிகைகள். இவைகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. "ஸ்டாண்டர்ட் சைஸ் தினசரிப் பத்திரிகை" (Standard-sized daily news paper) என்பது—அச்சடிக்கப்படாத இடங்களையும் சேர்த்து ஒரு பக்கத்தின் விஸ்தீர்ணம் 336 சதுர அங்குலங்களுக்குக் குறையாமலும் 432 சதுர அங்குலங்களுக்கு மேற்படாமலும் உள்ள பக்கங்களைக் கொண்டது. வாரத்தில் 7 நாட்களும் பிரசுரமாகும் இவ்வித பத்திரிகைகள் ஒரு வாரத்தில் 60 பக்கங்களுக்கு மேலும்; வாரத்தில் 6 தினங்கள் மட்டில் பிரசுரமாகும் இவ்வித பத்திரிகைகள் ஒரு வாரத்தில் 48 பக்கங்களுக்கு மேலும் பிரசுரம் செய்யக்கூடாது. "ஸ்டாண்டர்ட் சைஸ்" அல்லாத மற்றப் பத்திரிகைகள் ஒரு வாரத்தில் பிரசுரம் செய்யக் கூடிய பக்கங்களின் எண்ணிக்கையும் வீதாசாரமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதப் பத்திரிகைகள் வாரம் 7 தினங்களும் பிரசுரம் செய்யப்பட்டால்—அப்பத்திரிகையின் ஒரு பக்கத்தின் விஸ்தீர்ணம் 336 சதுர அங்குலத்தில் எவ்வளவு பாகம் இருக்கிறதென்று பார்த்து, 60ல் அதே வீதாசாரமுள்ள பக்கங்கள்தான் ஒரு வாரத்தில் இவர்கள் போடலாம்; வாரத்தில் 6 தினங்கள் மட்டில் பிரசுரம் செய்யும் இவ்வித பத்திரிகைள் அதேவிதமாக கணக்கு செய்து 48ல் அதே வீதாசாரமுள்ள பக்கங்கள் தான் ஒரு வாரத்தில் போடலாம்.

[குறிப்பு:—இக் கட்டுப்பாடு உத்தரவில் "ஸ்டாண்டர்ட் சைஸ்" அல்லாத பத்திரிகைகளின் மொத்தப் பக்கங்களைக் கட்டுப்படுத்தும் வாசகங்கள் தெளிவாக அமையவில்லை. தினசரி

அல்லாத மற்றப் பத்திரிகைகளுக்கு, பக்கங்களின் எண்ணிக்கைக்கு யாதொரு கட்டுப்பாடும் இல்லை.]

பத்திரிகை நடத்துபவர்கள் ஒவ்வொரு மாதமும் 7 தேதிக்குள் முந்திய மாதத்தில் தம்மிடமிருந்த நியூஸ் பிரிண்ட் எவ்வளவு, வாங்கியது எவ்வளவு, பத்திரிகைக்காகச் செலவானது எவ்வளவு, வேறு வகையில் செலவானது எவ்வளவு என்று நமூனா 1ன்படி கணக்கு (ரிடர்ன்) அனுப்பவேண்டும்.

நியூஸ்பிரிண்ட் வியாபாரிகளும் அதே விதம் ஒவ்வொரு மாதம் 7ம் தேதிக்குள் முந்திய மாதத்தில் தம்மிடம் இருந்த ஸ்டாக், வாங்கியது எவ்வளவு, விற்றது எவ்வளவு என்று கண்டு நமூனா 2ன்படி ரிடர்ன் அனுப்பவேண்டும்.

'ரிடர்ன்' அனுப்பப்பட வேண்டிய அதிகாரியின் விலாசம்:—இந்திய சர்க்கார் காரியதரிசி, (கைத்தொழில் சப்ளை) புது டில்லி. (Secretary to Government of India, Ministry of Industry and Supply, New Delhi.)

குறிப்பிட்ட பத்திரிகைகளுக்கு விதிவிலக்கு அளிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

(S. R. O. 1105-26-12-1950-இந்தியா கெஜட்; S. R. O. 1144, 1145—30-12-1950 இந்தியா கெஜட்)

## நமூனா 1—FORM I

### THE NEWSPRINT CONTROL ORDER, 1951.

(Clause 5)

Return of consumption of newsprint for the month of 195 .

Name of the newspaper

Full address

I/We declare that the following is a true account of the stock of newsprint held, acquired, consumed and otherwise disposed of by me/us during the month of 195 .

| | Newsprint in reels | | Newsprint in sheets | |
|---|---|---|---|---|
| | No. of reels | Weight in tons | No. of reams | Weight in tons |
| 1. Amount of stock in hand at the end of the last preceding month— | | | | |
| 2. Amount of stock acquired during the month from— | | | | |
| 3 Total of items 1 and 2 . . . . | | | | |
| 4. Amount of stock consumed during the month in the production of newspaper. | | | | |
| 5. Amount of stock otherwise disposed of during the month to— | | | | |
| 6 Total of items 4 and 5 . . . . | | | | |
| 7 Amount under item 3 less amount under item 6, being amount in stock at the end of the month. | | | | |

Dated 195 : Signature.

187704
-600 008

## நமூனை 2—FORM II

### THE NEWSPRINT CONTROL ORDER, 1951.

(Clause 6)

Return of stocks of newsprint for the month of ————195 .

Name

Full address

I/We declare that the following is a true account of the stocks of newsprint held, acquired and disposed of by me/us during the month of 195 .

| | Newsprint in reels | | Newsprint in sheets | |
|---|---|---|---|---|
| | No. of reels | Weight in tons | No. of reams | Weight in tons |
| 1. Amount of stock in hand at the end of the last preceding month. | | | | |
| 2. Amount of stock acquired during the month from———— | | | | |
| 3. Total of items 1 and 2 . . . . | | | | |
| 4. Amount of stock disposed of during the month | | | | |
| 5. Amount under item 3 less amount under item 4, being the amount in stock at the end of the month. | | | | |

Dated 195 .　　　　Signature.


## "வக்கீல்"
### (விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய
பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்) ரூ. 100
உள் அட்டை முழுப்பக்கம் ரூ. 80
உள் பக்கம் முழுப்பக்கம் ரூ. 60
ஷை ... அரைப் பக்கம் ரூ. 35
ஷை ... கால் பக்கம் ரூ. 20
ஒரு காலம் - அங்குலம் ரூ. 5
(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

## "வக்கீல்" பிரசுரங்கள்

1. தொழிற்சாலைச் சட்டமும — விதிகளும் [நமூனை 20-ன்படி சுருக்கம்] ரூ. 0—8—0

அச்சிலிருப்பது

2. ஷாப் சட்டம் ... ... ரூ. 1—8—0
3. விற்பனை வரி ... ... ரூ. 2—0—0
4. விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் (புதிய ஒத்தி திருத்தம் உள்பட) ... ... ரூ. 0—12—0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

மற்ற முக்கிய பிரசுரங்களை எதிர்பார்க்கவும்!

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)


PRINTED BY N. RAMARATNAM, M.A. B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM. TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD, *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

## ஜெயலட்சுமி என்ஜினீரிங் கம்பெனி,
## மணிக்கூண்டு, மாயூரம்.

**ஸ்டாக்கிஸ்டு:**

பிரிட்டிஷ் மேக் ரேடியோக்கள் அமெரிக்கன்,
ஆட்டோமாடிக் வாடர் லிஃப்டம்
எலக்டிரிக் மோட்டார்கள்
எல்லாவித ரேடியோக்களும் சாஸ்திரீய முறையில் பழுது பார்த்து கொடுப்பவர்கள்
ரெமிங்க்டன் போர்ட்டபிள் டைப்ரைட்டர் டீலர்கள்:

---

## "சக்தி ஆருடம்"!

**ஸ்ரீ K. R. அப்ளாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்சிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.**

**"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."**

1 to 3 **ஆருட கேள்விகளுக்கு ரூ.** 1.
**3-க்கு மேல் கேள்வி** 1**க்கு அணு** 8.
**1 வருட பலன் ரூ. 5.**
**ஜாதகம் கணிக்க ரூ. 2.**
**சக்தி கவசம் ரூ. 7—8—0.**
**வி. பி. பி. தனி.**
**ஜாதகம்** OR **எழுதும் நேரம் தேவை.**
N. B:—**வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.**

**சக்தி ஹோம், விருத்தாசலம்** P.O (S.I.)

---

## ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய புத்தகங்கள்

**காஞ்சீபுரம் P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்**

பதிப்புகளெல்லாம் கிடைக்கும்

**ஆழ்வார்களின்** நாலாயிர திவ்யப் பிரபந்தங்களுக்கும் **ஸகல ஸ்தோத்ர** பாடங்களுக்கும் ஸ்ரீவசனபூஷணதி **ரஹஸ்யங்களுக்கும்** எளிய உரைகள் கிடைக்கும். **ஸ்ரீராமாநுஜன்** என்கிற மாதப் பத்திரிகையும், **ஸ்ரீராமாநுஜர்,** தேசிகர், மணவாளமாமுனிகள் முதலான பூருவா**சார்யர்களின்** க்ரந்தங்கள் யாவும் கிடைக்கும், மற்றும் **பல நூல்களும்** கிடைக்கும்.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ உ. வே. ராவ்ஸாஹிப்,
***S. ரங்கஸ்வாமி ஐயங்கார்,*** (பென்ஷனர்)
***91,*** ஐயங்கார் தெரு, கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்:—

**காஞ்சீபுரம் க்ரந்தமாலா நிலயம்**

---

## எதிர்கால நிபுணர்

**பலன் சரியில்லாவிட்டால் பணம் வாபீஸ்**

**1 வருடப் பலன் ரூ. 3. விவாக விஷயம் ரூ. 2. கேள்வி 3-க்கு ரூ. 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.**

**ஜோதிமணி, வடிவேல் செட்டியார்**
**கடலூர்** (S. A. Dt.)

---

## விஜயா ஔஷத சாலை
## 1, சக்கரபாணிகோயில் வடக்குவீதி,
## கும்பகோணம்.

[நாள்பட்ட நோய்களுக்கும், கடுமையான நோய்களுக்கும், முக்கியமாக குஷ்டம், வெள்ளை குஷ்டம், க்ஷயரோகம், சுவாசகாசம், நீரிழிவு, தாது பலஹீனம், கக்குவான் இருமல், மூலம் முதலிய ரோகங்களுக்குக் கைகண்ட சிகிச்சை செய்யப்படும்.]

***1. பூர்ண சந்திரோதய மகரத்வஜம்***
க்ஷயம், தாதுபலஹீனம் முதலிய எல்லா வியாதிகளுக்கும் ஒப்பற்றது.
ஒரு விராகனிடை ரூ. ***30-0-0***

***2. விஜயா காயகல்பம்***
சிறந்த யௌவனபளிக்கும் டானிக் உணவு. 15 நாள் உபயோகம்.
1 பௌண்டு பாட்டில் ரூ. ***4-0-0***

***3. ஜீவாக்னிரஸம்***
ஜலதோஷம், ஜுரம், ஜன்னி, வாயு முதலியவைகளுக்கு சிறந்தது.
20 மாத்திரை பாட்டில் 1க்கு ரூ. ***1-0-0***

***4. கக்குவான் மருந்து***
கக்குவானுக்கும் இருமலுக்கும் கைகண்ட மருந்து. 1 தோலா ரூ. ***1-0-0***

***5. விஜயா ஆயிண்டுமெண்டு***
அக்கி, கரப்பான், சொரி, சிரங்கு, புண், புரை, காயம் முதலியவைகளுக்கு சிறந்தது. பாட்டில் 1-க்கு ரூ. ***0-12-0***

***6. சவனப்ராசம்*** 1 சேர் டின் ரூ. ***3-8-0***

***7. வில்வாதி லேகியம்***
½ சேர் டின் ரூ. ***1-12-0***

***8. அஸ்வகந்தி ரஸாயனம்***
1 சேர் டின் ரூ. ***3-0-0***

***9. ஸௌபாக்யசுண்டி***
½ சேர் டின் ரூ. ***1-8-0***

***10. தாமரைத் தைலம்***
***11. குமரித் தைலம்***
***12. கருஞ்செம்பைத்தைலம்***
***13. ப்ருங்காமலக தைலம்***
5 oz. பாட்டில் ரூ. ***1-8-0***

***14. க்ஷீரபலாத் தைலம்***
2 oz. பாட்டில் ரூ. ***1-2-0***

தவிர, சிந்தூரங்கள், **பஸ்பங்கள், லேகியங்கள், தைலங்கள், க்ருதங்கள்,** முதலியவை சிறந்த **ஆயுர்வேத** முறைப்படி தயார் **செய்து சரஸமான விலைக்குக் கொடுக்கப்படும்.**

**ஏஜண்டுகள் தேவை**
**ஆயுர்வேத ரத்னம்**
**R. ராமானுஜாச்சாரியார்,**
*Regd. Medical Practitioner.*
*(Indian System)*

Regd. No. M. 5399

COPY ... THE REGISTRAR OF BOOKS
8-FEB 1951
MADRAS

# "வக்கீல்"

(பொது மக்களுக்கான)

## தமிழ் சட்டப் பத்திரிகை

(மாதம் ஒரு முறை)

எளிய தமிழில், புதிது புதிதாய் வரும் சட்டங்களையும், கண்ட்ரோல், ரேஷன், லைசென்ஸ், விலை நிர்ணயம், வருமான வரி, விற்பனை வரி, ஷாப் சட்டம் போன்ற பல சட்ட விஷயங்களையும் சுலபமாயும் தெளிவாயும் அனைவரும் அவ்வப்பொழுது தெரிந்து கொள்ளலாம்.

விசேஷ பகுதிகள்: வழக்கும் - தீர்ப்பும்; கேள்வி - பதில்
தொழிலாளர் பகுதி; அயல் நாடுகளில்

**பிரதி இங்கிலீஷ் மாத முதல் தேதி வெளியாகும்**

"வக்கீல்" 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

**"வக்கீல்" பிரசுரங்கள் (சப்லிமெண்ட்கள்)
உள்பட விசேஷ வருட சந்தா ரூ. 5.**

எல்லா சுதேசமித்திரன், ஹிக்கின்பாதம் ரயில்வே புக்ஸ்டால்களிலும், பிரபல நியூஸ் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

## "வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம். (தென் இந்தியா.)